# பட்டயம்

மலர் - 08 மார்ச் - 2012 இதழ் - 5

Date of Issue : 01-03-2012

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 8

Issue : 5 Price Per Copy : Rs.5.00




**O LORD! BLESS US IN EVERYTHING**

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

## ஆசிரியர் கடிதம்

அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே!

கடந்த நாட்களிலெல்லாம் கர்த்தர் நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறார். அதற்காக அவரை ஸ்தோத்தரியுங்கள். எத்தனையோ தீமைகளிருந்து நம்மைத் தப்புவித்திருக்கிறார். அதற்காக அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும். நம்மைப் பாதுகாத்தார், தப்புவித்தார், தீமையிருந்து விடுவித்தார். அதற்காக ஸ்தோத்தரிக்க வேண்டும். அவர் இரக்கத்தினால் தான் நாம் ஜீவனுள்ளவர்களாய் இருக்கிறோம். மரணக் கட்டிருந்தும், பாதாளக் கட்டுகளிருந்தும் நம்மை கிருபையாய் பாதுகாத்தார். ஆகவே தீமையைக் குறித்து கவலைப்பட வேண்டாம்.

துன்பத்தில் என்னைக் கைவிட்டு விட்டார் என்று எண்ணாதிருங்கள். துன்பம் வந்தாலும் அதன் மத்தியிலும் ஆண்டவரைப் பற்றுங்கள். நம் ஜீவன் அவர் கையில் தான் இருக்கிறது. அவர் ஜீவாதிபதியாக இருக்கிறார். ஆகவே உங்கள் வாழ்வில் என்னென்ன துன்பம் வந்தாலும் அவரை மறுதக்காதிருங்கள். அவரை உறுதியாய் இன்னும் அதிகமாய் பற்றுங்கள். அப்பொழுது நீங்கள் நன்மைமேல் நன்மை பெறுவீர்கள். தீமைகள் ஒழியும்.

சிலர் ஆண்டவர் தாங்கள் சொல்வது போல் தான் செய்ய வேண்டும் என எண்ணுவார்கள். ஆனால் அவருக்கு இஷ்டமானதைச் செய்ய மாட்டர்கள். சிலருக்கு கர்த்தர் நன்மைகள் செய்தாலும் நன்றி இருக்காது. சிலர் ஆண்டவரைத் தான் குறை சொல்லுவார்கள். அப்படிப்பட்டவர்களாய் நாம் இருக்கக்கூடாது. ஆண்டவர் எனக்கு நிச்சயம் நன்மை செய்வார் என அறிக்கையிடுங்கள். அவர் தந்தவைகளில் திருப்தியாக இருங்கள். நன்றியாய் இருங்கள். உங்களுக்கு உதவி செய்தவர்களிடமும் நன்றியாய் இருங்கள்.

கர்த்தர் தாமே உங்களை அவர் சத்தியத்தின் வழியிலே நடத்துவாராக. ஆமென்.

### 360. தேவனுக்கு நம் நேரத்தை எப்படி செலுத்த வேண்டும்?

கர்த்தருக்கு செலுத்த வேண்டிய நேரத்தைச் செலுத்துங்கள். ஒரு நாளுக்கு 1440 நிமிடங்கள் உள்ளன. இதில் தசமபாகமாக 2 மணிநேரம் 24 நிமிடத்தை கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும். கர்த்தருக்கென்று தன் நேரத்தை கொடுக்காதவன் பேதுருவைப் போல் சோதனையில் தோல்வி அடைவான். ஒரு வாரத்திற்கு 168 மணி நேரத்தை கர்த்தர் நமக்குக்

கொடுத்திருக்கிறார். இதில் 3 மணி நேரமாவது சபை கூடி ஆராதிக்க ஒப்புக் கொடுக்க வேண்டும். நாம் ஜெபிக்க ஜெபிக்க வல்லமை பெருகும். மோசே தன் கைகளை உயர்த்தி ஜெபித்த போது இஸ்ரவேலருக்கு ஜெயம் வந்தது. நாம் ஆண்டவருக்கு வல்லமையை செலுத்தாவிட்டால் ஜெயம் வராது. கர்த்தருக்கு செலுத்த வேண்டிய கனம், துதி, ஸ்தோத்திரங்கள், காணிக்கைகளை செலுத்தாவிட்டால் அவர் நம்மை ஆசீர்வதிக்க மாட்டார். தேவனை ஒழுங்காக சபைகூடி ஆராதியுங்கள். ஜாமக்காரர்களாக இரவில் விழித்திருந்து 1 மணி நேரமாவது ஜெபியுங்கள். தினமும் 1 மணி நேரமாவது வேதத்தை தியானியுங்கள்.

ஓய்வு நாளில் கர்த்தரோடு அதிக நேரம் இருக்க வேண்டும் என விரும்புங்கள். கர்த்தருக்கடுத்த காரியங்களில் ஈடுபடுங்கள். சுவிசேஷத்தை பிறருக்கு அறிவியுங்கள். அன்றையதினம் கைநிறைய சம்பாத்தியம் பண்ண வேண்டுமென நினைக்கக்கூடாது. கர்த்தருக்கென்று வைராக்கியமாக இருந்தால், அவர் உங்களை நிச்சயமாக ஆசீர்வதிப்பார்.

**361. எகிப்தின் தேவர்கள் மேல் எப்போது தேவன் நீதி சரிக்கட்டுவார்?**

இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியே வருமுன்பாக அவர்கள் பஸ்காவைப் புசித்தார்கள். கால்களில் பாதரட்சைகளைத் தொடுத்து கொண்டும், கைகளில் தடியைப் பிடித்துக் கொண்டும் பஸ்காவை தீவிரமாய் புசித்தார்கள். ஆட்டை பயிட்டு அதின் மாம்சத்தை நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் அதை புசித்தார்கள். நம் பஸ்காவாகிய இயேசு நமக்காக அடிக்கப்பட்டார். இராப்போஜனப் பந்தியின் மூலம் அவர் மாம்சத்தைப் புசித்து அவர் இரத்தத்தை பானம் பண்ணி ஜீவ அப்பமாகிய இயேசுவோடு ஐக்கியப்பட வேண்டும்.

கர்த்தரோடு ஐக்கியப்படுவதற்கு எவையெல்லாம் தடையாக இருக்கிறதோ அவைகளையெல்லாம் விட்டுவிட வேண்டும். பஸ்காவைப் புசித்த இஸ்ரவேலர்களுக்கு வெற்றி வந்தது. ஜீவன் வந்தது. அவர்களைக் கொல்ல வந்த எகிப்தியருக்கு மரணம் வந்தது. நாமும் பரிசுத்தத்தோடு இராப்போஜன ஐக்கியத்தில் பங்கு பெறும் போது நமக்கும் வெற்றி உண்டு. ஜீவனும் உண்டு. அப்போது எகிப்தியரின் முதற்பேறானவைகளை அதம் பண்ணுவார். துன்மார்க்கரின் நம்பிக்கைகள், அவனுக்கு வலதுகை போல இருக்கும் காரியங்களை தேவன் அழிப்பார். அவன் நம்பிக்கைகள் வீணாய் போகும். எகிப்தின்

தேவர்கள் மேல் நீதி சரிக்கட்டுவார். மந்திரவாதிகளின் நம்பிக்கையான பிசாசுகளையும், மந்திரவாதங்களையும் அழிப்பார். குதிரையையும், குதிரை வீரனையும் கடலிலே தள்ளுவார். இன்றைக்கு காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணாதிருக்கச் செய்வார்.

**362. ஞானஸ்நானம் பெறுவதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும்?**

விசுவாசமுள்ளவர்களாகி மனந்திரும்பி, பிதா, குமாரன், பரி, ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறும் போது உங்கள் நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும். கல்யாண வஸ்திரம் உனக்கு தரிப்பிக்கப்படும். கர்த்தருடைய மந்தையில் நீ சேர்க்கப்படுகிறாய். நீ கர்த்தருடைய பிள்ளையாக மாறுகிறாய்.

பழையஏற்பாட்டிலே விருத்தசேதன உடன்படிக்கை இருந்தது. புதிய ஏற்பாட்டின்படி இருதயத்திலே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். ஞானஸ்நானத்தின் மூலம் உன்னை அவர் தம் சொந்த இரத்தத்தால் கழுவுகிறார். (தீத்து 3/5) பரலோகத்தின் சொந்தக்காரர்களாக நாம் மாறுகிறோம். பாவத்தை மன்னிப்பதற்கும், பாவத்திலிருந்து விடுவிக்கவும் வல்லமையும் அதிகாரமும் உடையவர் இயேசு மட்டுமே. ஞானஸ்நான உடன்படிக்கை என்பது ஏதோ சபையிலே சேருவதற்கான உடன்படிக்கை அல்ல. இது கர்த்தரோடு நாம் ஐக்கியப்பட அவர் நியமித்த பரலோக உடன்படிக்கையாகும்.

**363. பாதாளத்தின் வாசல்கள் நம்மை மேற்கொள்ளாதபடிக்கு நாம் என்ன செய்ய வேண்டும்?**

நாம் ஜீவனுள்ள கற்களாக மாறும் போது ஆண்டவர் நம்மைக் கொண்டு தம் சபையைக் கட்டி எழுப்புகிறார். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளக் கூடாதபடிக்கு கர்த்தர் சபையைக் கட்டுவார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆலயமாக இருக்கிறோம். அநேக ஜீவனுள்ள ஆலயங்கள் நம் மூலம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

பாதாளத்தின் வாசல்கள் நம்மை மேற்கொள்ளக்கூடாதபடிக்கு நாம் கட்டியெழுப்பப்பட வேண்டும். எந்த எதிர் காற்றடித்தாலும், எந்த பாதாளத்தின் வாசல்கள் மோதினாலும் நாம் விழுந்து போகக் கூடாது. உறுதியாய், அசையாமல், ஸ்திரமாய் நிற்க வேண்டும். இப்படிப்பட்ட கல்லின் மேல் தான் அவர் தம் சபையைக் கட்டுவார். ஆண்டவர் சபைக்கு சாத்தான் மேலும் சத்ருக்கள் மேலும் ஜெயம் கொடுக்கிறார்.

பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்ளக்கூடாதபடிக்கு கர்த்தரிலும் அவர் சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். அப்போது சர்ப்பத்தின் மேலும், சாத்தானின் சகல வல்லமையின் மேலும் அவர் உங்களுக்கு அதிகாரம் கொடுப்பார். ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது. எப்பேர்ப்பட்ட கொடிய பாவியாக இருந்தாலும் அவன் மேல் சபைக்கு அதிகாரம் உண்டு. 8 திறவுகோல் அதிகாரங்களை சபைக்குக் கொடுத்திருக்கிறார். இதில் ஒன்று 'பாதாளத்தின் திறவுகோல்' அதிகாரம். பாதாளத்தின் திறவுகோல் ஆண்டவராகிய இயேசுவின் கையிருக்கிறது. இந்த திறவுகோலைக் கொண்டு அவர் உங்களுக்கு விரோதமான சகல பாதாளக் கட்டுகளையும், மரணக்கட்டுகளையும் உடைத்து பாதாளத்தில் அடைத்து பூட்டும்படி ஜெபிக்க வேண்டும். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? (கொரி 15/55)

### 364. ஆண்டவர் ஏன் நம்மைத் தீமைகளுக்கு ஒப்புக்கொடுக்கிறார்?

ஆண்டவர் தீமைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுத்தாலும், தீமைகளிருந்து நமக்கு விடுதலையும் கொடுக்கிறார். நம் வாழ்வில் தீமை வரும் போது தான் நாம் நம்மைத் தாழ்த்துவோம். ஒரு தீமையும் வரவில்லையென்றால் தாழ்த்த மாட்டோம். தீமை வராவிட்டால் ஆண்டவரை அதிகமாக தேட மாட்டோம். தீமை வரும் போது தான் தீமையிருந்து விடுவிக்கிற ஆண்டவரின் வல்லமையை அறிந்து கொள்வோம். மகதலேனா மரியாளிடமிருந்து இயேசு 7 பிசாசுகளைத் துரத்தி விடுதலை கொடுத்த போது, அவளுக்கு ஆண்டவர் மேல் அதிக அன்பு வந்தது. அதிகமாகப் பாடுபட்டு விடுவிக்கப்பட்டவர்கள் அதிகமாக ஆண்டவரிடம் அன்பு கூருவார்கள். யாருக்கு அதிகமாக மன்னிக்கப்பட்டதோ, அவர்கள் அதிகமாக அன்புகூருவார்கள். நம் வாழ்க்கையில் வந்த எல்லாம் நன்மைக்காகத்தான். தீமைகளும் நன்மையாக அவரிடம் அன்புகூருவதற்கேதுவாய் மாறுகிறது. நம் வாழ்வில் அவர் செய்த நன்மைகளும் இன்னும் அவரிடம் அன்புகூருவதற்கேதுவாய் மாறுகிறது. அவர் செய்த நன்மைகளுக்காக இன்னும் அதிகமாக அவரைத் துதித்து மகிமைப்படுத்த வேண்டும்.

### 365. நம்மில் துதி முளைக்க என்ன செய்ய வேண்டும்?

நாவாலே அவரை ஸ்தோத்தரிக்கலாம். இதயம் அவருக்குத் தூரமாக இருந்தால் எந்த பிரயோஜனமும் இல்லை. நமக்குள் துதி முளைப்பதற்கு தடையாய் இருக்கிறவைகள் எவைகள் என்பதை ஆராய்ந்து பார்த்து அவைகளை விட்டுவிட வேண்டும்..

துதிப்பதற்கு தடைகள்

1. பாவம்
2. கவலை
3. பயம்
4. துக்கம்

இந்த நான்கையும் விட்டு விட்டு இதயத்தால், உள்ளத்தால், நாவால் அவரைத் துதிக்க வேண்டும். அப்போது நம் துதி ப□களின் மேல் தேவன் பிரியப்படுவார்.

## 366. எப்படிப்பட்ட ப□களைச் செலுத்தினால் தேவன் அதை பிரியமாய் ஏற்றுக் கொள்வார்?

ஆதி 15/9 ல் ஆபிரகாம் 3 வயது கிடாரியையும், 3 வயது வெள்ளாடு ஒன்றையும், 1 காட்டு புறாவையும் ப□செலுத்தினான் என பார்க்கிறோம். ஆபிரகாம் எல்லாவற்றையும் துண்டிக்கிறான். ஆனால் பறவைகளையோ அவன் துண்டிக்கவில்லை. பறவைகள் துண்டிக்காத படியால், துண்டிக்கப்பட்ட ப□யின் மேல் பறவைகள் வந்து இறங்கின. அவன் சரியாக ப□செலுத்தவில்லை. ஆகவே தேவ பிரசன்னத்துக்கு பதில் காரிருள் வந்தது. ஆபிரகாமுக்கு அயர்ந்த நித்திரை வந்தது. திகிலும், காரிருளும் வந்து அவனை மூடியது. சரியான ஆராதனை செலுத்தவில்லை. நீ சரியான முறையில் தேவனை ஆராதிக்காவிட்டால் பயமும், திகிலும் தான் வரும். தேவனுக்கேற்கும் ப□கள் நொறுங்குண்ட ஆவி தான். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இதயத்தை அவர் புறக்கணிக்க மாட்டார். தேவ சமூகத்திலே நம்மை இன்னுமாக தாழ்த்த வேண்டும். நம்மை முற்றிலும் நொறுக்கி, தாழ்த்தி அவரைப் பணிந்து, பயத்தோடும், பக்தியோடும் ஆராதிக்க வேண்டும். அவர் உன் அழகையோ, அலங்காரத்தையோ பார்க்கவில்லை. உன் இதயத்தை அவர் பார்க்கிறார். உன் உள்ளத்தின் அலங்காரத்தை அவர் பார்க்கிறார்.

ஆபிரகாம் சிலவற்றைத் துண்டிக்கிறான். பறவைகளை துண்டிக்கவில்லை. அது போல நாமும் கர்த்தருக்குப் பிரியமில்லாத சிலவற்றைத் துண்டிக்கிறோம். இன்னும் சிலவற்றை நம் வாழ்க்கையை விட்டுத் துண்டிக்காமல் விட்டு விடுகிறோம். உன் வார்த்தை சுத்தமாக இல்லாவிட்டால் அவர் உன் ப□களை, ஆராதனைகளை ஏற்றுக் கொள்ளமாட்டார். எல்லாம் சுத்தமாக இருந்தாலும் வார்த்தை சுத்தமாக இல்லாவிட்டால் பயன் இல்லை. ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனாக இருந்த போதிலும் அவன் ப□ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவனுக்கு

சாபம் தான் வந்தது. ஆதி 15/15 ல் உன் சந்ததியார் அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து 400 வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றார். ஆசீர்வாதத்திற்கு பதிலாக சாபம் வந்தது. கர்த்தருடைய முழுமையான ஆசீர்வாதங்களை நாம் பெற வேண்டுமானால், அவருக்கு செலுத்துகிற ப□சுத்தமாக இருக்க வேண்டும். நம் இருதயம் சுத்தமாக இருக்க வேண்டும். நம்மையே முழுமையாக ஆண்டவருக்கு ஜீவ ப□ாக ஒப்புக் கொடுக்க வேண்டும்.

**367. இயேசுவின் இரத்தத்தால் நாம் பெறும் பாக்கியங்கள் எவைகள்?**

1. பாவமன்னிப்பு
2. பரிசுத்தம்
3. நித்திய ஜீவன்
4. வியாதியின் மேல் வெற்றி
5. சாபங்களின் மேல் வெற்றி
6. பிசாசின் மேல் வெற்றி
7. பாவிகள் மேல் வெற்றி

**368. நாம் ஏன் சத்துருக்களிடம் பழி வாங்கக்கூடாது?**

பழைய ஏற்பாட்டின்படி கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் நியாயந்தீர்க்கும் அதிகாரத்தை மனிதனுக்கே கொடுக்கிறார். புதிய ஏற்பாட்டிலே ஆண்டவரே மனிதனாக வந்து தன்னையே ஜீவ ப□ாக ஒப்புக் கொடுத்தார். ஆகவே புதிய ஏற்பாட்டின்படி பழி வாங்குதல் ஆண்டவருடையது. நியாயந்தீர்க்கிற அதிகாரமும் அவருடையது. ஆகவே இப்பொழுது கண்ணுக்கு கண் அல்ல, பல்லுக்கு பல் அல்ல, பழிக்கு பழி அல்ல, தீமைக்கு தீமை அல்ல. தீமைக்கும் நன்மையே செய்ய வேண்டும். பட்டயத்துக்கு பட்டயம் எடுக்கக்கூடாது. பழிக்கு பழி வாங்கக் கூடாது. ஆண்டவரிடம் ஜெபிக்க வேண்டும். நாம் பழிக்கு பழி வாங்காமல் இருந்தால் ஆண்டவரே நமக்கு முழு பொறுப்பு. நம் தலையிலுள்ள ஒரு முடி கூட அவர் சித்தமில்லாமல் கீழே விழாது. ஒரு கன்னத்தில் உன்னை அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு என இயேசு சொன்னார். நாம் பொறுமையாக இருக்கும் போது நம் பாடுகளில் அவர் நம்மைத் தாங்கிக் கொள்வார். முழுமையாய் நம்மை அவர் கரங்களில் ஒப்புக் கொடுத்து அவருக்கு காத்திருக்கும் போது அவரே நமக்கு நியாயம் செய்வார்.

**369. கர்த்தரின் மகிமை என்றால் என்ன? மகிமை இறங்கும் போது என்ன நடக்கும்?**

சாலமோன் ஜெபித்த போது அக்கினி வானத்திருந்து இறங்கி தகன பலிகளைப் பட்சித்தது. கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று. ஆகவே ஆசாரியர்கள் ஆலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது. மழை பெய்யும் போது வானத்திலே வானவில் தோன்றுவது போல கர்த்தரின் மகிமை இருக்கும். கர்த்தரின் மகிமை நிரப்பும் போது ஆலயத்தில் வானவில் பிரகாசம் உண்டாயிருக்கும். கடைசி காலத்தில் ஒரு ஆலயத்தில் கர்த்தருடைய மகிமை வந்து இறங்கும். இந்த மகிமை நிறை ஆலயத்தைக் குறித்து அநேக தீர்க்கதரிசன வசனங்கள் இருக்கிறது. முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும், இந்த பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும் (ஆகாய் 2/9). இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன் (ஆகாய் 2/7). கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடு முடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப் பட்டிருக்கும். எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடி வருவார்கள் (மீகா 4 /1; ஏசாயா 2 / 2). அவர்கள் வந்து என் மகிமையைக் காண்பார்கள் (ஏசா 66 / 18). அவர்கள் என் மகிமையை ஜாதிகளுக்குள்ளே அறிவிப்பார்கள் (ஏசாயா 66 / 19)

கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும் (ஏசாயா 40/5). மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப் போலவும் இருக்கிறது. கர்த்தரின் ஆவி அதின் மேல் ஊதும் போது, புல் உலர்ந்தது, பூ உதிரும் (ஏசாயா 40/6,7)

ஆண்டவரின் மகிமைக்கு முன்பாக மனுஷனின் தங்கமும் வெள்ளியும் ஒன்றுமில்லை. கர்த்தரின் மகிமைக்கு முன் எதுவும் நிற்க முடியாது. கர்த்தரின் மகிமைக்கு முன்பாக மனுஷ மகிமைகள் யாவும் அழிந்து போகும். பிசாசின் மகிமை கர்த்தரின் மகிமைக்கு முன்பாக நிற்காது. ஆண்டவரின் மகிமையைக் காணும் போது ஜனங்கள் மனம் திரும்புவார்கள். பிசாசைக் கொண்டு மேன்மை பாராட்டுபவர்கள் வெட்கப்பட்டுப் போவார்கள். கர்த்தரின் மகிமை இறங்கி வரத்தக்கதாக நாம் ஜெபிக்க வேண்டும். கர்த்தருக்கு வழியை நாம் ஆயத்தப்படுத்த வேண்டும். நாம் ஜெபிக்க ஜெபிக்க கர்த்தரின் மகிமை இறங்கும். நாம் ஜெபிக்க ஜெபிக்க சாத்தானின் மகிமை அழியும். மரண இருளின்

திசையிருப்பவர்களுக்கு பெரிய வெளிச்சம் உதித்தது. நாம் ஜெபிக்க ஜெபிக்க தேவபிரசன்னம் இறங்கி வரும். தேவ பிரசன்னம் இருக்கிற இடத்தில் இருள் மாறிப் போகும். தள்ளாடுகிற முழங்கால்களை பெலப்படுத்தி, தளர்ந்த கைகளைத் திடப்படுத்த வேண்டும். (ஏசாயா 35/3) நாம் ஜெபிக்கும் போது

1. கோணலானவைகள் நேராகும்
2. பள்ளங்கள் நிரம்பும்
3. கரடு முரடானவை சமமாகும்
4. சகல மலையும் குன்றும் தாழ்த்தப்படும்.

ஏசாயா 2 / 1, 2 ல் எழுதப்பட்டுள்ள தீர்க்கதரிசன வசனத்தின்படி எல்லா ஜாதியாரும் கர்த்தரின் ஆலயத்திற்கு கடைசி நாட்களில் வருவார்கள்.

## 370. ஏன் நகை அணியக்கூடாது?

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். எளிமையை விரும்ப வேண்டும். ஆடம்பரத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது. மனுஷ மகிமையை விரும்பக்கூடாது. உடையில் எளிமை, பேச்சில் எளிமை, செயலில் எளிமை, சரீரத்தில் எளிமை இல்லாதவர்கள் ஆவியில் எளிமையாக இருக்க முடியாது. இருந்தாலும் எளிமையாயிரு. இல்லாவிட்டாலும் எளிமையாயிரு. எல்லாம் இருக்கிறதென்று சொல்லி ஆடம்பரம் பண்ணகூடாது. ஆடம்பரமாய் இருப்பவர்கள் பிறருக்கு எந்த விதத்திலும் பயனுள்ளவர்களாய் இருக்க முடியாது. அவர்களால் தேவனுக்கு பயனில்லை. எளிமையானவன் தேவனுக்கும், மனுஷனுக்கும் பிரயோஜனமுள்ளவன். தேவனுடைய பாக்கியமும் பெறுவான் (1பேதுரு 3/3-6 மத். 5/3-16).

## 371. இயேசு சாதாரண மனிதர் தானே?

இயேசு சாதாரண மனிதர் அல்ல. அவர் கன்னி மைந்தனாய் பிறந்தவர். எவனும் கன்னியின் மைந்தனாய் வரவில்லை. இயேசு மட்டுமே எந்த பாவமும் செய்யவில்லை. அவர் மண்ணுக்குரியவர் அல்ல. அவர் விண்ணிருந்து வந்தவர். விண்ணுக்கு ஏறி சென்றவர். மரித்தும் மூன்றாம் நாளில் தானாக உயிரோடு எழுந்தார். இன்னும் அவர் நாமத்தில் அற்புதங்கள் நடக்கிறது. இந்த உலகத்தை நியாயந்தீர்க்கும் படியாகவும், அவர் பிள்ளைகளை அவரோடு சேர்த்துக் கொள்ளவும் மீண்டும் வருகிறார். ஆகவே அவர் தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர், ராஜாதி ராஜா.

**372. இயேசு தெய்வமானால் அவரை எப்படி கொன்று விட முடியும்?**

இயேசுவே மெய்யான தேவன், ஆனால் மனிதனாக இந்த பூமிக்கு வந்தார். அவரை எவனும் கொல்ல முடியாது. அவர் நம் பாவங்களுக்காக தம்மையே பாவிகள் கைகளில் கொல்லப்படும்படி ஒப்புக் கொடுத்தார். அவர் தேவகுமாரனும், மனுஷகுமாரனுமாயிருக்கிறார். அவரது மனுஷீகத்தைத் தான் கொன்றார்கள். அவர் தெய்வத்துவத்தை எவனும் அழிக்க முடியாது. அவர் மனுஷகுமாரனாய் பல பாடுகள் பட்டு, சிலுவையில் மரித்தார். மீண்டும் தாமாகவே உயிரோடு எழுந்தார்.

**373. தேவனின் மனதுருக்கம் பெற என்ன செய்ய வேண்டும்?**

அவர் மனதுருக்கத்தின் தேவன் என்பதை விசுவாசிக்க வேண்டும். உங்களைப் பெற்ற தாயும், தகப்பனும் மனதுருக்கம் இல்லாமல் இருக்கலாம். அவர்கள் மறந்தாலும், இயேசு உங்களை மறப்பதில்லை. உன் வாழ்க்கையில் எப்பேர்பட்ட தீமைகள் வந்தாலும், அவர் உன் மேல் மனதுருகுகிற கர்த்தர் என்பதை மறந்து விடாதே. உன் வாழ்வில் அவர் செய்யும் எல்லாம் நன்மைக்குத் தான் இருக்கும். அவர் தீமை செய்கிற தேவன் அல்ல. அவர் மனதுருக்கத்தை பெற்றுக் கொள்ள நம்மிடம் என்ன தடை இருக்கிறது என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். விசுவாசியாதபடியால் அவர் மனதுருக்கம் உனக்குக் கிடைக்காமல் இருக்கலாம். அவரிடம் கெஞ்சும்போது நிச்சயமாக நமக்கு நன்மை செய்வார். அவர் நன்மையானவைகளைத் தருவார். எதைக் கொடுத்தால் நமக்கு நன்மை என்பது அவருக்குத் தெரியும். அவர் நம் மேல் மனதுருகுகிற தேவன்; ஆனால் நாம் பேராசைப்படக்கூடாது. அவருக்குச் சித்தமானவைகளை நமக்குத் தரும்படி கேட்க வேண்டும். நன்மையானதைத் தரும்படி ஜெபிக்க வேண்டும். தேவையானதை மாத்திரம் தரும்படி ஜெபிக்க வேண்டும்.

பிதா தன் ராஜ்யத்திற்கடுத்த காரியமாக இந்த பூமிக்கு தன் சொந்த குமாரனையே அனுப்பினார். மனந்திரும்பிய தேவபிள்ளைகள் தேவ ராஜ்யத்திற்கடுத்த காரியத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். தேவ ராஜ்யத்திற்கடுத்த காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது அவர் இரக்கம் நமக்குக் கிடைக்கும். ஆண்டவர் தம் பிள்ளைகளுக்காக மகா உக்கிரமான கடும் வைராக்கியமாய் இருக்கிறார். அவர் இரக்கமுள்ளவரானபடியால் நம் அக்கிரமங்களை மன்னிக்கிறார். அவர் நமக்கு இரக்கம் செய்வார் என்பதை முழு நிச்சயமாக நம்ப வேண்டும்.

**374. உலகம் பொல்லாங்கனுக்குள் இருக்கிறது என வேதம் சொல்கிறது எப்படி?**

உலகம் பொல்லாங்கனுக்குள் இருக்கிறது. ஆனால் பிசாசு இந்த உலகத்தைத் தாங்கவில்லை. ஆண்டவர் தான் இந்த பூமியைத் தாங்குகிறார். பூமியிலே சாத்தானின் கிரியைகளுக்கு இடம் இருக்கிறது. 2 விதமான சாத்தானின் கிரியைகள் உண்டு.

1. பாவ கிரியை

2. நேரடியான சாத்தானின் கிரியை

பாவத்தின் மேல் பிரியமாயிருக்கிறவன் சாத்தானின் பிள்ளையாயிருக்கிறான். சாத்தானை ஆராதிப்பவன் சாத்தானின் பிள்ளை.ஒரு சிலரே கர்த்தருக்குள் இருக்கிறார்கள். நன்மையைத் தெரிந்து கொள்கிறவன் ஆண்டவரின் பிள்ளையாய் மாறுகிறான். தீமையைத் தெரிந்து கொள்கிறவன் சாத்தானின் பிள்ளையாய் மாறுகிறான். ஆகவே இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது.

உலகம் பொல்லாங்கனுக்குள் இருக்கிறபடியால் நாம் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். பொல்லாதவனுக்கு பிசாசு ஒத்தாசை செய்யும். பிசாசை கட்டிப் போட வேண்டுமானால் அதிகமாக ஜெபிக்க வேண்டும். இரவில் தான் பிசாசு அதிகமாக வேலை செய்வான். நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் என எசே 28/30 ல் கர்த்தர் வருத்தத்தோடு சொல்கிறார். திறப்பின் வாசல் நின்று ஜெபிக்கும்படி ஆண்டவர் அழைக்கிறார். இரவில் ஜாமக்காரர்களாக விழித்திருந்து ஜெபியுங்கள். அப்போது பொல்லாங்கன் உங்களைத் தொடான்.

**375. யார் தேவனால் பிறந்தவன்?**

தேவனால் பிறந்தவன் பாவம் செய்யான். பாவம் என்று தெரிந்தும் அதைச் செய்பவன் தேவனால் பிறந்தவனல்ல. தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான். பாவத்திற்கு விலகுவான். பொல்லாங்கன் அவனைத் தொடான். எவன் பாவத்துக்கு இடம் கொடுக்கிறானோ அவனை சாத்தான் இன்னும் தொடுவான். பாவத்துக்கு விலக விலக சாத்தான் நம்மைத் தொட முடியாது. பொல்லாங்கன் நம்மை மேற்கொள்ள முடியாது. அப்படியே மோதினாலும் அவன் இஷ்டத்துக்கு நம்மை ஆளுகை செய்ய முடியாது (□யோவான் 3/9; 5/18).

**376. ஜாமக்காரர்கள் ஜெபத்தினால் என்னென்ன நன்மைகள் உண்டாகும்?**

1. புது நாமம் தரிப்பிப்பார். எப்சிபா என்ற நாமம் தருவார்  இனிக் கைவிடப்பட்டவள் அல்ல என பொருள். பியூலா என்ற நாமம் தருவார்  பாழான தேசம் வாழ்க்கைப்படும் என பொருள்.
2. கர்த்தரின் கையில் அலங்காரமான கிரீடமாக வைப்பார் - ஏசா 62/3.
3. அவர் கரத்தில் ராஜமுடியுமாயிருக்கச் செய்வார் - ஏசா 62/3.
4. தேவன் உன் மேல் மகிழ்ச்சியாயிருப்பார் - ஏசா 62/5.
5. உன்னை ஸ்திரப்படுத்தி பூமியிலே புகழ்ச்சியாக்குவார் - ஏசா 62/7.

ஜாமக்காரர்களாக விழித்திருந்து ஜெபிக்கும் போது சாத்தானால் வந்த கனவீனம், துன்பம், நிந்தை எல்லாம் மாற்றி உன்னைக் கனப்படுத்துவார். எந்த எதிர்காற்று வந்தாலும் உங்களை அசைக்க முடியாது. அவர் கட்டளைகளைக் கைக்கொண்டு ஜெபிப்பவர்களை பிசாசு மேற்கொள்ள முடியாது.

6. உன் தானியத்தை அவர் உன் சத்துருக்களுக்கு ஆகாரமாகக் கொடுக்க மாட்டார் - ஏசா 62/8. நீ விழித்திருந்து ஜெபிக்காவிட்டால் உன் கையின் பிரயாசத்தை பிறர் திருடிக்கொண்டு போவார்கள். நீ விழித்திருந்து ஜெபித்தால் உன் பிரயாசத்தின் பலனை சத்துருக்கள் எடுத்துக் கொள்ள அவர் விடமாட்டார்.
7. ஊழியத்தின் பாதையிலே உனக்கு வெற்றியை தருவார். உங்கள் ஜெபத்தால் உங்கள் வீட்டுக்கு மட்டுமல்ல, சபைக்கும் வெற்றி உண்டாகும். அநேக காரியங்களை ஆண்டவருக்கென நீங்கள் செய்து முடிக்க முடியும். 1 மணி நேர ஜாமக்காரர் ஜெபத்தால் அதிக வல்லமை உண்டு (ஏசா 62/9)
8. அவர் பிரதிபலன் தருவார் - ஏசா 62/11.
9. நீ கைவிடப்படுவதில்லை - ஏசா 62/12.
10. கர்த்தருக்கு பரிசுத்த ஜனமாய் இருப்பாய் - ஏசா 62/12.

**378. ஏன் வசனத்திற்கு செவிகொடுக்க வேண்டும்? வசனத்திற்கு செவிகொடுக்கும் போது என்னென்ன ஆசீர்கள் கிடைக்கும்?**

நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறப்பேன் (ஓசியா 4/6). என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன். அதை அந்நிய காரியமாக எண்ணினார்கள் (ஓசியா 8/2). வேதத்தை மறத்தல் என்றால்

1. வேதவசனத்தின் மேல் பிரியமில்லாமல் இருப்பது.

2. வசனத்தை வாசித்து, தியானிக்காமல் இருப்பது.
3. ஆலயத்திற்கு செல்லும் போது வேதத்தை கையில் கொண்டு செல்லாதிருத்தல்.
4. வேதத்தை ஆராய்ச்சி பண்ணாதிருத்தல்.
5. வேதத்தை அந்நிய காரியமாக எண்ணுதல் - வசனம் போதிக்கப்படும் போது அது யாருக்கோ? எவருக்கோ? என எண்ணுதல்.

வேதபுத்தகம் தேவனின் ஜீவ வார்த்தைகள் அடங்கிய புஸ்தகமாகும். கடவுளைப் பற்றி அறிய மனுகுலத்திற்கு கொடுக்கப்பட்ட ஓரே புத்தகம் வேத புத்தகமாகும் அவர் வசனத்தில் பிரியமாயிருந்து தியானமாய் இருக்கும் மனுஷன் பாக்கியவான் (சங் 1/2). கர்த்தரின் வார்த்தை வல்லமையுள்ளது. அதிலே ஜீவன் இருக்கிறது. அந்த வார்த்தையிலே எல்லா நன்மைகளும் நமக்குக் கிடைக்கும்.

அவர் வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்களுக்கு வேண்டிய உணவை விட வசனத்தை அதிகமாக விரும்புங்கள். அதிகாலையில் எழும்பி அவர் வசனங்களை தியானியுங்கள். கர்த்தர் உங்களோடு பேசுவார். வேத தியானத்திற்கு அதிகமான நேரத்தை ஒதுக்குங்கள். அப்போது எல்லா பாக்கியமும் கிடைக்கும்.

நீதி 4/22 அவைகளைக் கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம், தினமும் வசனத்தை தியானித்து விசுவாசத்தோடு வாயைத் திறந்து அறிக்கை செய்யுங்கள். உங்கள் சரீரத்திலே தேவன் ஆரோக்கியம் தருவார். மரணக் கட்டுகள் உடையும். ஜீவன் இருக்கும் இடத்திலே மரணம், மரணத்தின் அதிகாரம், சாத்தானின் அதிகாரங்கள் யாவும் விழுங்கப்படும். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுபெலன் அடைந்து கழுகுகளைப் போல் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்
(ஏசாயா 40/31)

## ஜெபங்கள் (தொடர்ச்சி)

### 72. கர்த்தர் தேவபிள்ளைகளுக்கு நியாயஞ் செய்து அதிசயங்கள் செய்யும்படி ஜெபம்

ஜெயம் கொடுக்கிற தேவனே! உமக்கு ஸ்தோத்திரம், அதிசயம் செய்யும் கர்த்தாவே! ஆராய்ந்து முடியா பெரிய காரியங்களையும், எண்ணி முடியா அதிசயங்களையும் செய்யும். இதோ நியமிக்கப்பட்ட

காலம் வந்துவிட்டது. உம் ஜனங்களுக்கு விடுதலை அளிக்கும் காலம் வந்துவிட்டது. வெற்றி வாழ்வு கொடுக்கும் காலம் வந்துவிட்டது, நீதியின் சூரியனே! உதித்திடும், அநியாயக்காரர்களால் வந்த எல்லா தீமைகள், தீவினைகள், பொல்லாப்புகள், வாதைகள், நெருக்கங்கள், கட்டுகள், பொருள் நஷ்டங்கள் யாவும் உடைவதாக. இடைவிடாமல் இரவும் பகலும் உம்மையே நோக்கிப் பார்க்கிறோம். இந்த கடைசி காலத்திலே கர்த்தரின் பிள்ளைகளை பேராபத்துகளுக்குத் தப்புவியும்.

உமக்கு விரோதமாக வீம்பு பேசிய ஜனங்கள் வெட்கப்பட்டு போவார்களாக. இறுமாப்புள்ள கழுத்துள்ளவர்களாய் பேசியவர்கள் தலை குனிந்து போவார்களாக. எம்மை உயர்த்தும் தேவ ஜனங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினவர்களைத் தாழ்த்திப் போடும். கலங்கிப் பொங்குகிற மதுபானத்தால் நிறைந்த பாத்திரம் உம் கையில் இருக்கிறதே! அதை வார்ப்பீராக. துன்மார்க்கர் அதின் வண்டல்களைக் குடிப்பார்களாக. அவர்களை அடக்கிப் போடும், கர்த்தாவே! அவர்கள் கொம்புகளையெல்லாம் வெட்டிப் போடும். அவர்களின் ஆள் பலம், பண பலம், தந்திர பலம், யாவும் அடங்கிப் போவதாக, அந்திகிறிஸ்து ஆவிகள் சுட்டெரிக்கப்படுவதாக. அவர்களின் கிரியை ஒன்றும் செல்லாமல் போவதாக. ஜனங்களை வஞ்சிக்கிற கொடிய பாவிகளின் கிரியைகள் செல்லாமல் போவதாக.

உமக்கு ஊழியம் செய்பவர்களுக்கும் செய்யாதவர்களுக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டும். துன்மார்க்கர்களுக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்குமுள்ள வித்தியாசத்தைக் காட்டும். கொடிய பாவிகளின் இருதயத்தில் சாத்தான் கொடுத்துள்ள சந்தோஷத்தை முற்றிலும் எடுத்துப் போடும். கலங்கி போவார்களாக; உம்மால் உண்டாகும் பயங்கரம் அவர்களைப் பிடிப்பதாக. தேவ ஜனங்களின் இருதயத்திலே சந்தோஷம், சமாதானம், ஆறுதல், நிம்மதி, இளைப்பாறுதல், பேரின்பம், தெய்வீக சுகம், சௌக்கியம், ஆரோக்கியம் மற்றும் எல்லா கிருபைகளையும் அனுப்புவீராக (ஆமென்).

**73. பிள்ளையின் அப்பமாகிய தெய்வீக சுகத்திற்காக ஜெபம்:**

அப்பா பிதாவே! உம்மை நோக்கிப் பார்க்கிறோம், பிள்ளைகளின் அப்பமாகிய தெய்வீக சுகத்தை எங்களுக்குத் தாரும். உம் கோபம் மூளும் நாட்களுக்குள் இருக்கிறோம். உம் பாதத்தில் விழுகிறோம். உம் கோபம் எங்கள் மேல் மூளாதபடிக்கு எங்கள் பாவங்களையெல்லாம் அறிக்கை செய்கிறோம். உம் இரத்தம் எம்மைப் பரிசுத்தப்படுத்துவதாக, உமக்கு பயந்து ஜீவிப்போம்; உமக்கு பிரியமாய் வாழுவோம், உம் சித்தம் செய்து

நிறைவேற்றுவோம். நித்திய கிருபையுடன் எனக்கு இரங்கும். உம் வஸ்திரத் தொங்கலை விசுவாசத்தோடு தொடுகிறோம். உம் குணமாக்கும் வல்லமை எங்கள் சரீரங்களுக்குள் பாய்வதாக, தீராத வியாதிகள், தீராத கட்டுகள், தீராத பெலவீனம், தீராத பிசாசின் கிரியைகள் யாவும் உம் குணமாக்கும் வல்லமையினால் முற்றிலும் அழிந்து போவதாக. முற்றிலும் குணமாக்கும்; புது சிருஷ்டியாக மாற்றும். உம் பிள்ளைகளாகிய எங்களுக்குள் பிள்ளையின் அப்பமாகிய தெய்வீக சுகத்தைத் தாரும். நீர் தந்த ஆரோக்கியத்திற்காய் உமக்கு ஸ்தோத்திரம். (ஆமென்).

**74. 3 வித கோபத்திற்கு கர்த்தர் கிருபையாய் நம்மைத் தப்புவிக்கும் படியான ஜெபம்:**

அப்பா பிதாவே! என்னை நோக்குபவரே! என் மேல் நினைவாயிருப்பவரே! 3 வித கோபங்கள் எங்கள் மேல் வராதபடி உம்மை நோக்கிப் பார்க்கிறோம். இந்த கடைசிக்காலத்திலே மனுஷனுடைய அக்கிரமம் பெருகிக் கொண்டிருக்கிறபடியால் உம் கோபம் பயங்கரமாய் வெளிப்படும் என்று சொன்னீரே! உம் கோபத்திலே நாங்கள் சிக்கிக் கொள்ளாதபடிக்கு உம் கிருபைக்குள் வர எமக்கு கொடுத்த தருணத்திற்காய் நன்றி. உம் இரக்கங்களைக் காட்டிலும் இந்த உலகத்திலே மேலானது ஒன்றுமில்லை. எங்கள் ஜீவனைப் பார்க்கிலும் உம் கிருபை மேலானது. என் ஜீவனின் அதிபதியே! என் ஜீவன் மேல் வல்லமையும், அதிகாரமும் உடையவரே! உம் கோபம் உலகமெங்கும் பற்றியெரியும் இந்த கடைசிக்காலத்தில் நாங்கள் தப்பி கொள்ளும் படியாக எங்களுக்கு இரங்கும். பாவமற முற்றிலும் உம் பரிசுத்த இரத்தத்தால் கழுவும். வரும் ஆபத்து நாளிலே நாங்கள் தப்பிக் கொள்ளத் தக்கதாக உம்மை நோக்கிக் கூப்பிடுகிறோம். எல்லா நாமங்களுக்கும் மேலான உம் நாமம் அல்லவோ இரட்சிக்கும் நாமம்! உம் கிருபாசனத்திருந்து கிருபையை அனுப்பும்,

சாத்தானின் கோபம் எங்கள் மேல் வராதபடிக்கு உம்மை நோக்கி கெஞ்சுகிறோம். சாத்தான் கெர்ச்சிக்கும் சிங்கம் போல் எவனை விழுங்கலாமென்று வகை தேடி சுற்றித்திரிகிறான். அவன் கரத்தில் சிக்கி கொள்ளாதபடி, அவனால் விழுங்கப்படாதபடி யூத ராஜ சிங்கமே உம்மிடம் வருகிறோம். எங்களுக்கு விரோதமாக வாயைப் பிளந்து கொண்டிருக்கிற கொடிய சாத்தானின் வாயைப் பூட்டிப் போடுவீராக. அவன் எங்கள் மேல் எந்த கிரியையும் செய்யாதபடிக்கு அவனுடைய சகல துர்க்கிரியைகளையும், தீமைகளையும் கட்டிப் போடுவீராக. எந்த

இருளின் அதிகாரங்களோ தேவ பிள்ளைகளை தொடக்கூடாதபடிக்கு இயேசுவின் இரத்தம் எங்களை மூடிக் கொள்வதாக. உம் இரத்தத்தால் சாத்தானின் மேல் ஜெயம் எடுக்கிறோம்.

மனுஷனின் கோபம், மனுஷனின் கொலை வெறிகள், ஆணவம்,

அகங்காரம், பகை, இச்சை, துர்க்கிரியைகள், வன்கண், பொறாமைகள், மனிதனின் கண்ணிகள், அடிமைத்தனங்கள், பொல்லாத ஆளுகைகள், நுகங்கள் ஒன்றும் அடியார்கள் மேல் வாய்க்காமல் போகும் படியாக உம் கிருபையைப் பரலோகத்திருந்து அனுப்பும். மனுஷனின் கோபம் உமக்கு முன் செல்லாமல் போவதாக; வாய்க்காமல் போவதாக; மனுஷ கோபங்கள் அடங்கிப் போவதாக. உம் மிகுந்த கிருபைகளை அனுப்பி இந்த 3 கோபத்திற்கும் தப்புவியும் (ஆமென்).

**75. பிசாசு கட்டுகளிருந்து விடுதலைக்காக ஜெபம்:**

இரக்கங்களின் தேவா! ஸ்தோத்திரம். அன்று குஷ்டரோகியைத் தொட்டு குணமாக்கினீரே! என் பாவ குஷ்டங்கள், சாப குஷ்டங்கள், வியாதி குஷ்டங்கள், சாத்தான் குஷ்டங்கள், எல்லாவற்றையும் நீக்கும். அனாதி சிநேகத்தால் சிநேகிப்பவரே! ஸ். அன்றொரு நாள் மனுஷனால் வெறுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டு, புத்தி தெளிவில்லாமல் இருந்த லேகியோன் கட்டுடைய மனிதனை குணமாக்கினீரே! அவனைத் தேடி சென்று வாழ்வு கொடுத்தீரே! இதோ என்னை ஒப்புக் கொடுக்கிறேன்; மனுஷரால் அவமதிக்கப்பட்டு இருக்கிறேன்; தனித்து விடப்பட்டிருக்கிறேன்; ஒதுக்கப்பட்டு இருக்கிறேன்; பிசாசின் நிமித்தம் என் வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள், நஷ்டங்கள், அவமதிப்புகள், அவபழிகள், இருக்கிறதே! யாரிடம் போவேன் கர்த்தாவே! என் வேதனைகளை மனிதன் புரிய முடியாது. ஆனால் என் வேதனைகளை நீர் புரிந்திருக்கிறீர்; சாத்தான் மேல் ஜெயமெடுத்த தேவனே! ஸ்தோத்திரம். அசுத்தமாக்கும் பிசாசுகளும், தற்கொலை ஆவிகளும், தன்னைத் தான் காயப்படுத்தும் ஆவிகளும் இயேசுவின் நாமத்தினால் ஓடிப்போவதாக. அடக்க முடியாத பிசாசுகளை அடக்கிப் போடும். வீட்டிலே தங்க விடாத பிசாசுகள், வெளியே புறப்பட விடாத பிசாசுகள், தூங்க விடாத பிசாசுகள், பிரயாணம் பண்ண விடாத பிசாசுகள், வேலை செய்ய விடாத பிசாசுகள், வேலை ஸ்தலத்தில் பிரச்சனை உண்டாக்கும் பிசாசுகள், கையிட்டு செய்யும் வேலைகளை வாய்க்க விடாத பிசாசுகள் யாவும் இயேசுவின் நாமத்தினால் சுட்டெரிக்கப்படுவதாக. என்னைப் பெலவீனப்படுத்தும்

பிசாசுகள், வேதனைப்படுத்தும் பிசாசுகள் எனக்கு முள்ளாய் இருக்கும் பிசாசுகள் யாவும் இயேசுவின் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவதாக. இயேசு நாமத்தினால் அவைகளை மிதிக்கிறோம். இந்த கல்ன் மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்று வாக்கு கொடுத்தவரே! பாதாளக் கட்டுகள், வேதாள கட்டுகள், மரணக் கட்டுகள், வியாதி கட்டுகள் யாவும் அழிவதாக. இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ளவும் நான் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். ஒன்றும் சேதப்படுத்தாது என்றீரே! எங்களுக்கு விரோதமான எல்லா சர்ப்பங்கள், தேள்கள், நோய் கிருமிகள், உயிரியல் பயங்கரவாதங்கள் எல்லாவற்றையும் கட்டி, பூட்டி, சுட்டெரித்து ஜெபிக்கிறோம். ஒன்றும் தொடாதபடி ஆண்டவர் எம்மைக் காப்பீராக ஆமென்.

**76. கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து அவரை ஸ்தோத்தரித்து ஜெபம் :**

எனக்காய் பரிதபிக்கிற தேவா! ஸ் என் மேல் நினைவாயிருக்கும் தேவா! ஸ். ஒரு கண்ணும் என் மேல் இரக்கமாயில்லாமல் போனாலும் உம் கண்கள் என் மேல் இரக்கமாயிருந்த தயவிற்காய் ஸ்தோத்திரம். நான் அருவருக்கப்பட்ட நேரங்களிலே நீர் என்னை அருவருக்கா திருந்தீரே! ஸ். வெளியிலே எறிந்து விடப்பட்ட நிலையிலே இருந்த என்னை தூக்கி எடுத்த தேவா! ஸ். மரண வேளைகளிலும் மரண கட்டுகளை உடைத்து என்னை தூக்கி எடுத்தீரே! அந்த நன்மைகளுக்காய் ஸ்!

மனுஷர்களாய் மிதிக்கப்படும் சூழ்நிலைகளிலே என்னை கனப்படுத்தினீரே! என் எலும்புகள் முறிக்கப்படாமல் என்னை காத்தீரே! 'பிழைத்திரு' என்று சொல்பிழைக்க முடியாத வேளையிலும் பிழைக்கப் பண்ணின தேவா!ஸ். என் காலம் சமீபமாயிருந்த வேளையிலே என் காலத்தை நீட்டி கொடுத்து என்னை நிமிர்ந்து நிற்கப் பண்ணின தேவா!ஸ்

தகப்பன், தாய் அன்பு கிடைக்காமல் போன வேளைகளிலும் உம் இரக்கங்கள் எனக்கு கிடைத்த தயவுக்காய் ஸ்! என் நண்பர்கள் இரக்கம் செய்யாமல் போன சூழ்நிலைகளிலும் உம் இரக்கங்கள் எனக்கு கிடைத்தபடியால் ஸ்! மனுஷர்கள் என்னைக் கைவிட்ட சூழ்நிலையிலும், நீர் கைகொடுத்த தயவிற்காய் ஸ்! மனுஷர்கள் என்னை மறந்து போன

வேளையிலும் நீர் என்னை மறவாமல் இருந்த நன்மைகளுக்காக ஸ்! பரலோகத்தின் தேவனே! என்னை கண்ணோக்குகிற தயவிற்காய் ஸ்!

கடந்து வந்த பாதைகளை நினைத்துப் பார்க்கிறேன். கண்ணீரோடு நன்றி சொல்கிறேன். நீர் எனக்குப் பாராட்டிய மனதுருக்கத்திற்காக ஸ் ! அதே மனதுருக்கம் தொடர்ந்து என் வாழ்விலே உம்மிடமிருந்து கிடைக்கத் தக்கதாக உம் மனதுருக்கத்திற்காக கெஞ்சுகிறேன். மனம் இரங்கி ஆசீர்வதியும் (ஆமென்)

## 77. இராப்போஜன பந்தியில் பங்கெடுக்க ஜெபம் :

கர்த்தாவே உம் இரத்தத்தினால் உடன்படிக்கைக்குள் வரத்தக்கதாக திறந்த வாசல் திறக்கப்படுவதாக. இராப்போஜன பந்தியில் பங்கெடுக்க என்னென்ன தடைகள் இருந்தாலும் அவைகளை மாற்றும். பாவ தடைகள், மனுஷ தடைகள், பிசாசு தடைகள், சுய தடைகள், சமுதாய தடைகள், உலக சிநேகம், நிர்விசாரம் எல்லாவற்றையும் உடைத்து உம்மோடு இரக்கத்தால் உடன்படிக்கை பண்ண ஆண்டவர் எமக்குத் திறந்த வாசலை வைப்பீராக. ஒருவரும் அதைப் பூட்ட முடியாமல் போவதாக. ஆமென்.

## 78. கர்த்தர் நமக்காக சத்துருக்களிடத்தில் பழிவாங்கும்படி ஜெபம்

கர்த்தாவே! வெளி 6/10ன் படி ஜெபிக்கிறோம். பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே! எங்கள் இரத்தத்தைக் குறித்து எது வரைக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமலும், பழி வாங்காமலும் இருக்கிறீர் என்று மகா சத்தமாய் உம்மை நோக்கி கூப்பிடுகிறோம். ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசும் உம் இரத்தம் எங்கள் மேல் தெளிக்கப்படுவதாக. அநியாயமான இரத்தத்திற்காக பழி வாங்கும். ஆண்டவரே கொடிய பாவிகளோடும், கொடிய பிசாசோடும் யுத்தம் நடப்பதாக. கொடிய துன்மார்க்கர்கள் கட்டிப் போடப்படுவார்களாக. உயிரோடிருக்கும் நாளெல்லாம் நீர் மோசேயோடு இருந்தது போல் எங்களோடிருந்து கொடிய பாவிகள் எங்களை மேற்கொள்ளக்கூடாதபடிக்கும், கொடிய பிசாசுகள் எங்களை மேற்கொள்ளாதபடிக்கும் நீர் எங்களோடிருந்து எந்நாளும் யுத்தம் செய்வீராக. தீமைகள், தீவினைகள் ஓடிப் போவதாக. இயேசுவின் இரத்தம் பழிவாங்குவதாக ஆமென்.